தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-

மலர் 26

இதழ் 05

செப்டம்பர் 2024

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

## சுதந்திர தின விழா 2024





சாதனைகள் படைப்பதில் **சளைத்தவர்களல்ல** என்பதை மீண்டும், மீண்டும் **நிரூபித்து வரும்** உங்களுக்கு எனது **பாராட்டுகள்...**


**ககன் தீப் சிங் பேடி,** இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009


# வாழ்த்துரை

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

முற்றம் இதழின் வாயிலாக மாதந்தோறும் உங்களை சந்திப்பது எனக்கு பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

மக்கள் நலம் நாடும் நம் தமிழ்நாடு அரசு, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் பொருளாதார சுய சார்பிற்காகவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அரசின் திட்டங்கள் முறையாக சுய உதவிக் குழுக்களைச் சென்றடையச் செய்திடும் உன்னத பணியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாக செய்து வருவது பாராட்டிற்குரியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் அறிவித்த சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்கான அறிவிப்புகளைச் செயல்படுத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை நானும், உயர் அலுவலர்களும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்வதுடன், குழுக்கள் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றேன்.

சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அரசின் பிற துறைகளின் சார்பில் செயல்படுத்தும் திட்டங்களிலும் சுய உதவிக் குழுவினரை ஈடுபடுத்தி, அத்திட்டங்களின் வெற்றிக்கு துணை நிற்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் தொடக்கப் பள்ளி மாணவ – மாணவியர்களின் பசியினைப் போக்கும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில்" இணைந்து செயலாற்றி வரும் சுய உதவிக் குழுவினரின் அளப்பரிய பங்களிப்பினைப் பாராட்டும் விதமாக நமது மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு சுதந்திர தின விழாவன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருது வழங்கியுள்ளது சுய உதவிக் குழுவினரின் வெற்றிக்கு மேலும் ஒரு மைல்கல்லாகும்.

இந்த விருதானது சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஊக்கம் அளிப்பதாகவும், அவர்களின் செயல்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்குவதாகவும் உள்ளது. சாதனைகள் படைப்பதில் சளைத்தவர்களல்ல என்பதை மீண்டும், மீண்டும் நிரூபித்து வரும் உங்களுக்கு எனது பாராட்டுகள். உங்களின் செயல்பாடுகளுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம் !!!

அன்புடன்,

(ககன்தீப் சிங் பேடி)




திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்


**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் சிறிய அளவில் துவக்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் இன்று மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்று, இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பிற மாநிலங்களிலும் சுய உதவிக் குழு இயக்கம் தோன்ற வழி ஏற்படுத்தித் தந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் தந்த ஊக்கத்தினாலும், ஆக்கப்பூர்வமான வழிகாட்டுதல்களினாலும், “நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், நிமிர்ந்த ஞானச்செருக்கும்” உள்ளவர்களாக இன்று சுய உதவிக் குழுப் பெண்கள் திகழ்கின்றனர்.

கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளியவர்களை குழுவாக ஒன்றிணைத்து, பல்வேறு பயிற்சிகள் வழங்கி, வங்கிக் கடன் இணைப்புப் பெற்றுத் தந்து, அவர்களை தொழில் முனைவோர்களாக உருமாற்றும் உன்னதப் பணியினை அயராது செய்து வரும் மகளிர் திட்டம், பிற துறைகளின் மூலம் செயல்படுத்தும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான திட்டங்களிலும் சுய உதவிக் குழுவினரின் பங்களிப்பை வழங்கிட ஊக்குவித்து வருகிறது.

சுய உதவிக் குழுவினரான உங்களின் உன்னத சேவைக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் கடந்த மாதம் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு “நல்ஆளுமை விருது” வழங்கியது உங்களின் வெற்றிக்கு மற்றொரு மகுடமாகும். உங்களுக்கு எனது வாழ்த்துகள்.

‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ என்ற வார்த்தைகளை கருத்தில் கொண்டு, நீங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும். உங்களின் வெற்றிப் பயணத்தின் இடையூறுகளை தகர்த்து, தொடர்ந்து நீங்கள் வெற்றியை நோக்கி முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

செப்டம்பர் மாதம் என்றவுடன் என் நினைவிற்கு வருவது ஆசிரியர் தினம்தான். ஒரு மனிதனின் வெற்றிக்கு அடிப்படையாக விளங்கும் கல்வியை தரும் ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில் நல்லாசிரியராகவும், நம் நாட்டின் ஜனாதிபதியாகவும் திகழ்ந்த மேதகு ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 5ஆம் தேதி ஆசிரியர் தினம் அனுசரிக்கப்படுகிறது என்ற செய்தி மகளிர் உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களுக்குத் தெரியும். நாடு நலம் பெறவும், வீடு வளம் பெறவும் பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். குறிப்பாக மாபெரும் இயக்கமாக வளர்ந்து வரும் சுய உதவிக் குழு இயக்கத்தில் உறுப்பினராக உள்ள பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன என்பதை மீண்டும் ஒருமுறை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் இயக்கத்தின் வெற்றிக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகிய அனைத்து அமைப்புகளின் உறுப்பினர்களான நீங்கள் ஒத்துழைப்பினை நல்க வேண்டும். ஏனெனில் பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு நீங்கள் பெற்று வரும் வெற்றிகளே சான்றாகும். மகளிர் சுய உதவிக் குழுக்களின் திறமையை வெளிக்கொணரவும், அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திட வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் “விற்பனைக் கண்காட்சிகள்” நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறவுள்ள நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் சுய உதவிக் குழுவினர் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

உங்களின் செயல்பாடுகளுக்கு ஊக்கமும், வெற்றி பெறத் தேவையான உதவிகளையும் தருவதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் முன்நிற்கும். ‘முயற்சி திருவினையாக்கும்’ என்ற வார்த்தையைக் கருத்தில் கொண்டு உங்கள் அனைவரின் செயல்பாடுகளும் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும் என்பதைக் கூறிக் கொண்டு மீண்டும் ஒருமுறை உங்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

ஸ்ரேயா.

(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக்குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக்குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

– (குறள்: 91)

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்.

# உள்ளே...



7 சுதந்திர தின விழா – 2024


20 நவராத்திரி விற்பனைக் கண்காட்சி


9 நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு


33 உடல் நலம் காப்போம்...


12 சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு


34 பட்டாணி சாதம்


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

# முற்றம்

விலை ரூ. 20/– • மலர் 26 • இதழ் 05 • செப்டம்பர் 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். தெய்வநாயகி,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி,** DRO / பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## ஊக்குநர்களும் ஆசிரியர்களே...



அன்புள்ள வாசகர்களுக்கு,

ஆடி மாதம் என்றாலே காற்று அடிக்கும் மாதம் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், இந்த ஆண்டு அதற்கு நேர்மாறாக காற்றுக்கு பதிலாக தமிழகம் முழுவதும் பரவலாக மழைப் பொழிவை பார்க்க முடிந்தது. இதற்கு காரணம் பருவநிலை மாற்றம் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த பருவநிலை மாற்றத்தைப் பற்றியும், அதற்கான காரணங்கள் பற்றியும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

கல்விக் கூடங்களில் பயிலும் மாணவர்கள் முதல் முதியோர்கள் வரை இதற்கான விழிப்புணர்வை பெற வேண்டும். இதற்கு கல்விக் கூடங்களில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். ஆசிரியர்களை சமுதாயத்தின் சிற்பிகளாகத்தான் அனைவரும் பார்க்கின்றோம். ஆசிரியர் பணி என்பது மகத்தான ஒன்று. ஆசிரியர்கள் வெறுமனே பிள்ளைகளுக்கு பாடம் கற்பிப்பதோடு நின்று விடாமல், சமூக பொறுப்புடன் நாட்டின் சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டுபவர்களாக விளங்க வேண்டும்.

ஆசிரியர்களின் முக்கியத்துவம் கருதி அரசு அவர்களுக்கு கணிசமான ஊதியம் வழங்குவதுடன், நல்லாசிரியர் விருதுகளும் வழங்கி சிறப்பித்து வருகிறது. அதோடு, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் ஆசிரியர் தினம் கொண்டாடுவதன் மூலம் அவர்களை கவுரவப்படுத்தியும் வருகிறது. ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியப் பெருமக்களுக்கு முற்றம் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர்கள் ஒவ்வொருவரும் ஆசிரியர்களாக செயல்பட்டு தங்கள் உறுப்பினர்களுக்கு சமுதாய வளர்ச்சிக்கான விழிப்புணர்வு கல்வியை கொடுக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அறியாமையில் இருக்கும் உறுப்பினர்களுக்கு, அதிகம் கல்வியறிவு இல்லாத உறுப்பினர்களுக்கு, வாழ்க்கையில் முன்னேற முடியுமா என ஏக்கத்தோடு இருக்கும் உறுப்பினர்களுக்கு ஊக்குநர்கள் வழிகாட்டிகளாக செயல்படுவதே சிறந்த பண்பாகும். பொறுப்புள்ள ஆசிரியர்கள்தான் மாணவர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் இந்த நாட்டினை வளர்ச்சி அடையச் செய்ய முடியும்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

# சுதந்திர தின விழா – 2024

**சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.**





நம் நாட்டின் சுதந்திர தின விழா நாடு முழுவதும் வெகு விமரிசையாகவும், உற்சாகமாகவும் கொண்டாடப்பட்டது. சென்னை தலைமைச் செயலகம் அமைந்துள்ள புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விழாப் பேருரை நிகழ்த்தினார். முன்னதாக முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, திறந்த ஜீப்பில் சென்று அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்.














இவ்விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தகைசால் தமிழர் விருது, டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் விருது, துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனாசாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருது, சமூக நலத்திற்கான மற்றும் சிறந்த சேவைக்காக சிறப்பாகத் தொண்டாற்றியவர்களுக்கான விருது, சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருது, முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத் திறனாளி குழந்தைகள் அமர்ந்திருந்த பகுதிக்கே சென்று, அன்போடும் பரிவோடும் அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி, சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்தார். விருது பெற்றவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் குழுப்புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

தலைமைச் செயலக கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை நீதிமன்ற நீதியரசர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்கள், அரசு உயர் அலுவலர்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# முத்தமிழறிஞர் கலைஞர்
## நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு







சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 18.08.2024 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரை முருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு ஒன்றிய இணை அமைச்சர் திரு. எல்.முருகன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஸ் தக்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்ப்புதல்வன் திட்டம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 09.08.2024 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளிலும் மற்றும் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- உதவித் தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள். இவ்விழாவில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு பள்ளிக்






கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர். ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. கணபதி ராஜ்குமார், திரு. கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான நல்ஆளுமை விருது

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு வழங்கும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் காலை உணவு சமைக்கும் பணியில் தன்னலமற்று சேவை மனப்பான்மையுடன் ஈடுபட்டு வருகின்றனர். சுய உதவிக் குழு மகளிரின் சேவையைப் பாராட்டும் வகையில், சென்னை கோட்டை கொத்தளத்தில் 15.08.2024 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான நல்ஆளுமை விருதினை', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களுக்கு வழங்கினார்.

## நல்ஆளுமை விருது பெற்றமைக்காக வாழ்த்து பெறுதல்





சென்னை கோட்டை கொத்தளத்தில் 15.08.2024 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான நல்ஆளுமை விருதினைப் பெற்ற தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும், நான் முதல்வன் திட்டத்திற்கான நல் ஆளுமை விருதினைப் பெற்ற தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

# தலைமைச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டமைக்கு வாழ்த்து பெறுதல்



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள், 19.08.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்திலும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்திலும் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில்
# சுதந்திர தின கொண்டாட்டம்

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 15.08.2024 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.






# சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து, 09.08.2024 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் கள ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில், கொளக்கரைவாடி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படும் ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக் கடன் உள்ளிட்ட நிதி உதவிகள் வழங்கப்பட்ட விபரம், திருப்பிச் செலுத்தப்பட்ட விபரம் மற்றும் சமூக ரீதியான செயல்பாடுகள் குறித்தும் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் ஆய்வு செய்தார்.

பின்னர், திருவண்ணாமலை ஒன்றியம், வேங்கிக்கால் ஊராட்சியில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யும் அங்காடியைப் பார்வையிட்டு, பொருட்கள் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, வந்தவாசியை அடுத்த மாலையிட்டான் குப்பம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் கோரைப் பாய்களைப் பார்வையிட்டு, அவற்றின் விற்பனை முறைகள் குறித்துகேட்டறிந்தார்.பின்னர்,பிருதூர் கிராமத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பாக்கு மட்டை தட்டுகள் தயாரித்தல், மசாலாப் பொடிகள் தயாரித்தல் தொழிலில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டார்.

மேலும், ஆடையூர் ஊராட்சி கிரிவலப் பாதையில் பக்தர்களுக்காக அமைக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் கட்டண கழிப்பறையைப் பார்வையிட்டு, கழிப்பறையில் தண்ணீர் தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில் நவீன முறையில் நீரின் அளவினைத் தெரிவிக்கும் டிஜிட்டல் கருவி அமைக்கப்பட்டுள்ளதையும், மாற்றுத் திறனாளிகளுக்கு சாய்வு தளப் பாதையுடன் அமைக்கப்பட்டுள்ள கழிவறையையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, கழிவறைகளை தூய்மையாக பராமரித்து வரும் சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார்.
















அதனைத் தொடர்ந்து, செங்கம் ஊராட்சி, சின்ன கோளாப்பாடி ஊராட்சியில் உள்ள வானவில் பாலின வள மையத்தினை பார்வையிட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், திருவண்ணமாலை நகராட்சி எம்.ஜி.ஆர். நகரில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் அப்பளம் தயாரிக்கும் அலகினைப் பார்வையிட்டு, அப்பளத்தின் தரம், தயாரிக்கும் முறைகள், வருகை மற்றும் இருப்பு விவரப் பதிவேடுகள், பொருட்களின் விவரம் போன்றவை குறித்து கேட்டறிந்தார்.

இவைகளைத் தொடர்ந்து, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், பழவேரி கிராமத்தில் விறகு வெட்டும் தொழில் செய்து வந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தும் பெட்ரோல் பங்கை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.



இந்த ஆய்வின் போது, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் திருமதி. க. முத்து மீனாள், திரு. ஜெ. கணேஷ் கண்ணா, திருமதி. எஸ். கவிதா, திரு. நா. அருள்ஜோதி அரசன், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. ரா.மணி, மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. சரண்யா தேவி மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.




# மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் மளிகைப் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்த பயிற்சி திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்காலில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர்கள், மாவட்ட வள வல்லுநர்கள் (பண்ணை மற்றும் பண்ணை சாரா) உள்ளிட்டவர்களுக்கு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மாநில அளவில் சந்தைப்படுத்துதல், விலை நிர்ணயித்தல், பேக்கிங் மற்றும் பிராண்டிங் மேற்கொள்ளும் முறைகள் குறித்தும் விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி முகாமினை 08.08.2024 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ. பாஸ்கர பாண்டியன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். முன்னதாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை வீடுகள்தோறும் விற்பனை செய்யும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்து, பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மு. பிரியதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. எஸ். கவிதா, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. சரண்யா தேவி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மதி சிறுதானிய உணவகம் திறப்பு விழா

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மதி சிறுதானிய உணவகக் கட்டிடத்தினை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., அவர்கள் 08.08.2024 அன்று திறந்து வைத்து, சிறுதானிய உணவுப் பொருட்களைப் பார்வையிட்டார்.



# அரசின் நலத் திட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு

**ஜி. குமரன்,** மாநில திட்ட மேலாளர்,
தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம்

நாட்டிலேயே முதன் முதலாக எண்பதுகளின் இறுதியில் தமிழ்நாட்டில் விதைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு எனும் விதை, தொண்ணூறுகளில் துளிர்விட்டு கடந்த சுமார் 35 ஆண்டுகளில் சிற்றூர், பேரூர், கிராமம், நகரம் என அனைத்து பகுதிகளிலும் வளர்ந்து பெரும் ஆலமரமாய் அல்ல; கானகமாய் விரிந்துள்ளது என்றால் மிகையாகாது.

ஆரம்பக் காலங்களில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் உறுப்பினர்களின் வளர்ச்சியை மையப்படுத்தியே அமைந்து இருந்தது. அதிலும், சேமிப்பு, சிறுகடன், சிறு சுய தொழில்கள், விவசாய மேம்பாட்டில் பெண்கள் போன்ற செயல்பாடுகளில் துவங்கி பின்னர் உறுப்பினர்களிடையே சமூக விழிப்புணர்வு, ஆளுமை திறன் மேம்பாடு, முடிவெடுக்கும் திறன், தலைமைத்துவம் போன்ற மென்திறன் பயிற்சிகளில் பெண்களின் திறமைகள் பட்டைத் தீட்டப்பட்டது. இதனால், சுய உதவிக் குழுவினர் தங்கள் குடும்ப வளர்ச்சியிலும் ஈடுபடலாயினர். பின்னர் குழந்தைகளின் கல்வி, திருமணம், சொத்து உருவாக்கம், மருத்துவ செலவுகள், புதிய தொழில் துவங்குதல், விவசாய உற்பத்தி என குடும்பத்தின் பல்வேறு பொருளாதாரம் சார்ந்த பொறுப்புகளிலும் - வளர்ச்சிகளிலும் பெண்கள் ஆண்களை விட முன்னிலை வகிக்கின்றனர்.

பின்பு, தனிநபர், குடும்பம் சார்ந்த செயல்பாடுகளுடன், சமூகத்தின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தலாயினர். கிராமங்களில் சாலை வசதி, நியாய விலை கடை, குடிநீர் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு குரல் எழுப்பத் துவங்கி, படிப்படியாக பெண்களுக்கு எதிரான வன்முறை, மது ஒழிப்பு, வன்கொடுமை, சமூகக் குற்றங்கள், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற சமூக / பொதுப் பிரச்சினைகளிலும் சுய உதவிக் குழுக்களும், கூட்டமைப்புகளும் போராடத் துவங்கி பல சூழல்களில் வெற்றியும் கண்டனர். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு வழங்கும் "கூட்டமைப்புகளுக்கான மணிமேகலை விருது" குழுக்களின் இத்தகைய சமூக செயல்பாடுகளுக்கு சிறந்த சான்றாகும்.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் மேலும் பரிணமித்து, நடப்பு சூழலில் அரசின் பல வளர்ச்சி திட்டங்கள் சுய உதவிக் குழுக்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் போக்கு அதிகரித்து வருவது சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கான ஒரு குறியீடு என்பதுடன், அரசு திட்டங்களின் செயலாக்கத்தில் இது ஒரு புதிய அணுகுமுறை எனவும் கூறலாம். சுய உதவி குழுக்களின் துணையுடன் அரசு செயல்படுத்திவரும் ஒரு சில திட்டங்கள் இதோ.

### மக்களை தேடி மருத்துவம் :

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட மகளிர், சுகாதார தன்னார்வலர்களாக தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு துணை சுகாதார மையத்துடன் இணைக்கப்பட்டு, கிராம மக்களுக்கு தொற்றா நோய் தடுப்பு முறைகள் குறித்து நேரடியாக விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர். மேலும், மருத்துவரின் பரிந்துரையின்படி நாள்பட்ட நோயாளிகளுக்கு உரிய மருந்து மாத்திரைகளை வழங்கி வருவது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. சமீபத்தில் ஒரு கோடி பயனாளிகளுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் சேவை கொண்டு சென்றது பல தளங்களில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இதற்கென சுய உதவிக் குழுக்களை சேர்ந்த சுமார் 8,713 சுகாதார தன்னார்வலர்கள் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.





## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

சுய உதவிக் குழுக்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு செயல்பாடுகளுக்கு முத்தாய்ப்பாய் அமைந்தது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து செயல்படுத்தும் இத்திட்டத்தின் அளப்பரிய வெற்றியினால் இன்று 30,992 அரசுப் பள்ளிகள் மற்றும் 3,995 அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 21 இலட்சம் மாணவ - மாணவிகள் சத்தான காலை உணவு உண்டு மகிழ்கின்றனர்.

இம்மாபெரும் சாதனையின் பின்னணியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 82,000 பெண்கள் ஆரோக்கியமான, தரமான காலை உணவு சமைத்துத் தரும் பணியினை புரிவது இத்திட்டத்தின் வெற்றிக்கு காரணம். இச்சிறப்புமிகு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தமிழக அரசின் "நல் ஆளுமை விருது" தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களுக்கு 15.08.2024 அன்று நடந்த சுதந்திர தின விழா நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கி சிறப்பித்தது இத்திட்டத்தின் வெற்றிக்கு பெரும் சான்றாகும்.



## தூய்மை பாரத இயக்கம் :

வீடுதோறும் கழிப்பறை அமைத்தல், திறந்தவெளி கழிப்பறைகளை அகற்றுதல் எனும் நோக்குடன் 2014ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தூய்மை பாரத இயக்கம், சுய உதவிக் குழுக்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு கிராமத்திலும் சுய உதவிக் குழுவைச் சார்ந்த பெண்களை தன்னார்வலராகத் தேர்வு செய்து, அவர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தி தனிநபர் கழிப்பிடம் கட்ட ஊக்குவிக்கப்பட்டதுடன், கழிப்பிடம் கட்டுவதற்கான செலவினத்தை மேற்கொள்ள இயலாத பயனாளிகளுக்கு சுய உதவிக் குழுக்களின் மூலம் கடன் உதவி அளித்து செயல்படுத்தியதன் வாயிலாக தமிழ்நாட்டில் சுமார் 55.11 இலட்சம் தனிநபர் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்று 100% திறந்தவெளி கழிப்பிடம் அற்ற மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது.

மேலும், 2020 ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 2ஆம் தேதி வரை நடத்தப்பட்ட ‘நம்ம ஊரு சூப்பரு’ விழிப்புணர்வு பிரச்சாரம் வாயிலாக, தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



தமிழ்நாடு அரசின் இதுபோன்ற பல நலத் திட்டங்கள் சுய உதவிக் குழுக்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருவதால் திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதுடன், உரிய பயனாளிகளை சென்றடைவதால் அரசுக்கு நற்பெயர் ஏற்படுவதுடன், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் வாழ்வாதாரமாக அமைந்துள்ளது.

இவ்வாறு கல்வி, சுகாதாரம், மருத்துவம், விழிப்புணர்வு என பல பரிமாணங்களில் தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்கு சுய உதவிக் குழுக்கள் பங்களித்து வருவது பெரும் பாராட்டுக்குரியது. மேலும், எதிர்வரும் காலங்களிலும் அரசின் புதிய திட்டங்களில் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு பெரும் வரவேற்பினைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

## மகளிர் திட்டத்தால் கிடைத்த பொருளாதார வளர்ச்சி

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியம், கெண்டிகாணஹள்ளி ஊராட்சி, கொட்டுமாரனஹள்ளி கிராமத்தில் வசிக்கும் 20 பெண்கள் ஒன்றாக இணைந்து 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் தலகொண்ட அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கினர். இக்குழுவின் பெயரில் பெரியணஹள்ளி கிளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் சேமிப்பு கணக்கைத் துவங்கி சேமித்து வந்தனர். குழுவிற்கு முதல் கடன் இணைப்பாக 1,20,000/- ரூபாய் வழங்கப்பட்டது.

இக்கடனை முறையாக திரும்ப செலுத்திய பின்னர் மீண்டும் இக்குழுவிற்கு ரூ.3,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினரான கிரிஜா என்பவர் குழு உள் கடனாக ரூ.15,000/- பெற்று, தையல் இயந்திரம் வாங்கினார். இவரது கணவர் இலவம் பஞ்சு வியாபாரம் செய்து வந்ததால், கிரிஜா தலையணை தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தார். அத்தொழில் மூலம் ஓரளவு வருமான கிடைக்கப் பெற்றது. பின்னர் இந்த ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் அமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் இக்குழுவிற்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.1,00,000/- வழங்கப்பட்டது. இந்த நிதியில் கிரிஜாவிற்கு ரூ.30,000/- பொருளாதார கடனாக வழங்கப்பட்டது. இதனுடன் வங்கியின் மூலம் குழுவிற்கு மூன்றாம் முறையாக ரூ.7,50,000/- கடன் பெறப்பட்டது. இவற்றில் உறுப்பினர் என்ற முறையில் கிரிஜாவிற்கு ரூ.37,000/- வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இவ்வாறு கடன் பெற்ற நிதியினை கொண்டு கிரிஜா இலவம் பஞ்சு கொட்டை அகற்றும் இயந்திரம் கொள்முதல் செய்து படுக்கை மெத்தை தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு குழுவிற்கு நான்காம் முறையாக வங்கிக் கடனாக ரூ.15,00,000/- வழங்கப்பட்டது. திருமதி. கிரிஜா குழுவின் மூலம் கடன் பெற்று தற்போது, தலையணை, படுக்கை மெத்தை ஆகியவற்றை அதிக அளவில் தயாரித்து உள்ளூர் மற்றும் வெளியூர்களில் விற்பனை செய்து மாத வருமானமாக ரூ.25,000/- வரை பெற்று வருவதுடன், 5 பெண்களையும் பணிக்கு அமர்த்தியுள்ளார். தனக்கு நீடித்த நிலையான வாழ்வாதாரம் கிடைக்க செய்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு தன்னுடைய மனமார்ந்த நன்றிகளை திருமதி கிரிஜா தெரிவித்துக் கொள்கின்றார்.







# 1,500 பெண்கள், 1,000 ரூபாய் முதலீடு, நிம்மதியான வருமானம்..

## விவசாய விளைபொருள் விற்பனையில் கலக்கும் மகளிர் குழு!



செல்வி



மோகன சுந்தரி

‘கூட்டுறவே... நாட்டுயர்வு’ என்பார்கள். இந்த விஷயத்தைக் கையில் எடுத்திருக்கும், காஞ்சிபுரம் மாவட்டம், ‘நந்திவர்மன் மதி மகளிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், “நாங்க சாதிச்சுட்டோம்” என்று பெருமையோடு கை உயர்த்துகிறது.

இயற்கை விவசாயத்தையும், விவசாயிகளையும் அடுத்தக் கட்டத்துக்கு நகர்த்திக் கொண்டிருக்கும் இந்தப் பெண்கள் குழுவை சந்தித்தோம். 1,500 பெண்கள் ஒன்றாக இணைந்து நடத்தும் இந்தக் குழுவின் செயல்பாடுகள், புதிய முயற்சிகள் குறித்து நம்மிடம் பேச ஆரம்பித்தார், நிர்வாகக்குழு உறுப்பினர்களில் ஒருவரான செல்வி...

“எல்லாருமே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. தனித்தனியா விவசாயம் பண்ணிட்டு இருந்தோம். வெவ்வேறு மகளிர் விவசாயக் குழுக்களா இருந்தோம். விவசாயம்ங்கிறது நாளுக்கு நாள் நலிவை சந்திக்கிற தொழிலா மாறுச்சு. எங்களுக்கு வேற வேலையும் தெரியாது. விவசாயத்தை மீட்டெடுக்கணும், பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தர்ற மாதிரியான விஷயங்களைச் செய்யணும், எங்களோட விளைபொருள்களுக்கு நல்ல விலையும் கிடைக்கணும்ங்கிற மூணு இலக்குகளை யோசிச்சோம்.

ஒவ்வொரு விவசாயக் குழுவும், அவங்கவங்க உற்பத்தி பண்ற பொருள்களை இடைத்தரகர்கள் மூலமா வித்துட்டு இருந்தாங்க. முதல்ல இதை மாத்தணும்னு முடிவெடுத்து சுற்றுவட்டாரத்துல இருக்குற எல்லா விவசாயக் குழுக்களையும் ஒண்ணா சேர்க்க முடிவு பண்ணோம். இதன் மூலம், நிறைய பொருள்களை ஒரே இடத்துல விற்பனை செய்ய முடியும்; ஒரு பிராண்டாவும் மாத்தலாம்; நிறுவனமாவும் மாறலாம்னு தோணுச்சு. இந்த முயற்சிக்கு வெற்றியும் கிடைச்சது” என்று செல்வி முடிக்க, குழுவைச் சேர்ந்த மோகன சுந்தரி தொடங்குகிறார்...

“எங்களோட உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்துல காஞ்சிபுரம் மாவட்டத்துல உள்ள 73 ஊராட்சிகளைச் சேர்ந்த 1,500 விவசாயக் குடும்ப பெண்கள் உறுப்பினர்களா இருக்காங்க. பலரும் ஸ்கூல் படிப்பைகூட முழுசா முடிக்காதவங்க. உற்பத்தியாளர் நிறுவனம் ஆரம்பிச்ச பிறகு, எங்களோட பொருள்களை



நாங்களே மதிப்புக்கூட்டல் பண்ணி விற்பனைக்கு அனுப்புறோம். எங்களுக்கு இப்போ சந்தை விலை தெரியுது, மக்களோட தேவையும், விருப்பமும் என்னனு தெரியுது.

நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் மாதிரியான எண்ணெய் வகைகளையும், உளுந்து, கேழ்வரகு, பச்சைப்பயறு, கம்பு போன்ற சிறுதானியங்களையும் விற்பனைக்கு அனுப்புறோம். இந்த மூலப்பொருள்களை விவசாயக் குழுக்கள் கிட்டருந்தோ, தனி விவசாயிகள்கிட்டருந்தோ வாங்கி, தரம் பிரிச்சு, சுத்தம் செஞ்சு, பேக்கிங் பண்ணி விற்பனைக்கு அனுப்புறோம். இதுக்காக உணவுக் கட்டுப்பாட்டுத் துறையில இருந்து தரச்சான்றிதழும் வாங்கியிருக்கோம்.

அந்தந்தக் குழுவில் உள்ள இயந்திரங்களைப் பயன்படுத்தி பிசினஸை அடுத்தகட்டத்துக்கு நகர்த்துறோம். ஒரே இடத்திலேயே அனைத்து வகையான எண்ணெய் வகைகளையும் ஆட்டுறோம். அதுல கிடைக்குற புண்ணாக்கு வகைகளை தனியா எடை போட்டு எங்க ஏரியாவுல மாடு வெச்சுருக்கிற விவசாயிகளுக்கு விற்கறோம். எங்க நிறுவனத்துலேருந்து ஒவ்வொரு மாசமும் 100 லிட்டர் நல்லெண்ணெய், 800 லிட்டர் கடலை எண்ணெய், 100 லிட்டர் தேங்காய் எண்ணெய், 50 கிலோ உளுந்து, 50 கிலோ கேழ்வரகு, 60 கிலோ பச்சைப்பயறு, 50 கிலோ கம்பு தவிர கூடுதலா சில சிறுதானிய வகைகளையும் விற்பனை பண்ணிட்டு இருக்கோம். நாங்க மதிப்புக் கூட்டுற அல்லது தரம் பிரிக்கிற பொருள்கள்ல நிறத்துக்காகவோ, வாசனைக்காகவோ எந்த ரசாயனமும் சேர்க்கிறதில்ல. இயற்கை விவசாய முறையில உற்பத்தி பண்ற விவசாயிகள்கிட்ட இருந்து மட்டும்தான் பொருள்களை வாங்குறோம். அதனால மக்கள் நம்பி வாங்குறாங்க” என்று சொன்ன மோகனசுந்தரி,

“கடன்ல இருந்த எங்க நிலங்களை இந்த நிறுவனம் மூலமா மீட்டு எடுத்திருக்கோம். மாசம் இப்போ மூணு லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் பண்றோம். கிடைக்குற லாபத்தை அவங்கவங்க உழைப்புக்கு ஏத்த மாதிரி பிரிச்சுக்கிறோம். அதாவது, 1,500 உறுப்பினர்களுமே ஒரே நேரத்துல உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்துறது இல்லை. எத்தனை பேர் சந்தைப்படுத்துறோமோ... அத்தனை பேரும் உரிய தொகையைப் பிரிச்சி எடுத்துப்போம். இடைத்தரகர் இல்லாததால, எங்களுக்கு திருப்தியான வருமானம் கிடைக்குது. உருப்படியா ஒரு விஷயத்தைப் பண்றோம்ங்கிற திருப்தியோட அடுத்த கட்டத்தை நோக்கிப் போயிட்டு இருக்கோம்” என்று நம்பிக்கையுடன் விடைபெறுகிறார்கள்.



நன்றி! அவள் விகடன்
10:09:2024

## மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின்

# நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

21.09.2024 முதல் 06.10.2024 வரை • காலை 10.00 மணி இரவு 08.00 மணி வரை

**பட்டு, பருத்தி ஆடைகள், செயற்கை ஆபரணங்கள், கைவினைப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை, வாழை நார் மற்றும் தோல் பொருட்கள், நவராத்திரி கொலு பொம்மைகள், வாசனைப் பொருட்கள், மரம் மற்றும் சுடுமண் சிற்பங்கள்**

## அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்ந்திட தனி அரங்குகள்

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறும்

இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்









## தெரிந்து சொல்லுங்கள் -1

1. சுய உதவிக் குழு எந்த ஆண்டு துவக்கப்பட்டது?
2. சுய உதவிக் குழு இயக்கத்தை தொடக்கி வைத்தவர் யார்?
3. முதன் முதலில் எந்த மாவட்டத்தில் சுய உதவிக் குழு ஆரம்பிக்கப்பட்டது?
4. சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டும்?
5. எத்தனை மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீடு செய்யப்படுகின்றன?

மேற்கண்ட வினாக்களுக்கு சரியான விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பும் நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்**
(மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்),
அன்னை தெரசா மகளிர் வளாகம், முதல் தளம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

## முற்றம் இணையதளம் மற்றும் கைபேசி செயலி



முற்றம் மாத இதழ் அனைவரையும் சென்றடைந்திடவும், முற்றம் சந்தாதாரர்களின் முகவரியை இணையதளத்தில் எளிதில் பதிவிடும் வகையில், முற்றம் மாத இதழிற்கான பிரத்யேக இணையதளம் மற்றும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் அந்தந்த மாவட்டத்தை சார்ந்த சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

### வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

### LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ddugkytn2016@gmail.com

சட்டம் என்ன சொல்கிறது?

# பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள்



பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் பல சட்டங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சில சட்டங்களையும், அவற்றின் முக்கிய அம்சங்களையும் அறிந்து கொள்வோம் வாருங்கள்.

### இந்தியத் தண்டனைச் சட்டம் 354–டி பிரிவு : பின்தொடர்தல் (Stalking)

பின் தொடர்தல் என்பது,

- ஒரு பெண்ணை பின் தொடர்வது அல்லது தொடர்பு கொள்ள முயலுவது, தனக்கு பேசுவதில் ஆர்வமில்லை என்று அந்தப் பெண் கூறிய பிறகும் மீண்டும் மீண்டும் அந்தப் பெண்ணிடம் அந்த நபர் தொடர்பு கொள்ள முயற்சி செய்வது.
- பெண்ணின் இணையதளப் பயன்பாடு, மின்னஞ்சல் அல்லது மின்னணு தகவல் தொடர்பு சாதனங்கள் பயன்பாடு போன்றவற்றைக் கண்காணித்தல்.
- பெண்ணைக் கண்காணித்தல், உளவு பார்த்தல் அதன் மூலமாக அந்தப் பெண்ணிடம் வன்முறை பயத்தை ஏற்படுத்துதல் அல்லது மனதில் மனஅழுத்தத்தை ஏற்படுத்துதல்; அல்லது மன அமைதியைக் குலைக்கும் வகையில் செயல்படுதல்.

### தண்டனை:

இக்குற்றங்கள் புரிபவருக்கு ஒரு ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

### எத்தகைய செயல்கள் பின்தொடர்தல் குற்றம் ஆகாது ?

கீழ்க்கண்ட நடத்தைகள் பின் தொடர்தல் குற்றம் ஆகாது:

- ஒரு குற்றத்தை கண்டுபிடிக்கவோ, தடுக்கவோ பின் தொடர்தல், ஒரு குற்றத்தைக் கண்டுபிடிக்க அல்லது தடுப்பதற்காக அரசு அளித்த பொறுப்பை அடுத்து, அந்தக் காரணங்களுக்காக ஒருவர் பெண்ணைத் தொடருதல்.
- சட்டத்தை நிறைவேற்றுதற்காக அல்லது நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக அல்லது சட்டப்படி எந்த ஒரு நபருக்கும் அளிக்கப்பட்ட பொறுப்பு காரணமான தேவை;
- குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அந்த நடத்தை நேர்மையானதாக, நியாயப்படுத்தக் கூடியதாக இருத்தல்;

### இந்திய தண்டனைச் சட்டம் 509–வது பிரிவு :

பெண்ணின் மானத்திற்குக் களங்கம் (Modesty of a Woman) விளைவிக்கும் வகையில் பேசுதல், சைகைகளைக் காண்பித்தல் மற்றும் செயல் புரிதல்

பெண்ணின் மானத்திற்கு கலங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுதல் அல்லது பெண்ணின் மானத்திற்கு கலங்கம் ஏற்படும் என்று அறிந்தே செயல்படுவது குற்றமாகும்.

### தண்டனை :

இந்தக் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு ஓராண்டு முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

பெண்ணின் மானத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல் உள்ளதா என்பதற்குப் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்:

- பெண்ணின் மானத்திற்கு களங்கம் விளைவிக்கும் நோக்கம்;
- பெண்ணின் மானத்திற்கு களங்கம் ஏற்படும் என அறிந்து கொண்டே அதைச் செய்தல்;
- பெண்ணின் கண்ணியத்துக்கு பங்கம் ஏற்படுத்தி அதிர்ச்சியூட்டும் வகையில் குற்றம் சாட்டப்பட்ட நபரின் செயல் இருத்தல்.

# சுற்றுச்சூழலைக் காக்கும் துணிப்பைகளை தயாரிக்கும் திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழு

மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, மீனாம்பாள்புரம் குடிசைப் பகுதியில் திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழு 2015ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் இந்தியன் வங்கியில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து, தங்களால் இயன்ற அளவில் சேமித்து வந்தனர். இக்குழுவினர் சுய தொழில் மேற்கொண்டிட ஏதுவாக இந்தியன் வங்கியில் முதல் வங்கி கடன் இணைப்பு ரூ.2,23,000/- பெற்றனர். பின்னர் இரண்டு மற்றும் மூன்றாம் வங்கி கடன் இணைப்பாக முறையே ரூ.3,80,000/- மற்றும் ரூ. 8,00,000/- பெற்றுள்ளனர்.

முதலில் இக்குழுவினர் ஒரு சில தையல் இயந்திரங்களை வாங்கி சிறிய அளவில் தொழில் தொடங்கினர். பின்னர் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு துணிப்பைகள் தைக்க பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ந்து குழுவின் சார்பில் ரூ.1,00,000/- முதலீட்டில், தையல் யூனிட் துவங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அரசு நிறுவனம், தனியார் நிறுவனங்களிடமிருந்து ஆர்டர் பெற்று துணிப்பைகள் தைக்க ஆரம்பித்தனர். தற்போது ஆலங்குளம் பகுதியில், 10 தையல் இயந்திரங்களுடன் பெரிய அளவில் தையல் யூனிட் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாத வருமானமாக ரூ. 10,000/- வரை பெற்று வருகின்றனர்.

கல்லூரி சந்தை, அரசு பொருட்காட்சி, அரசு விழாக்கள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சிகள் ஆகியவற்றில் திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவினர் விற்பனை அரங்குகளை அமைத்து தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

தங்களின் வாழ்வாதாரத்தை வளமாக்கிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





# நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி...

என் பெயர் சத்யா, நான் தருமபுரி நகராட்சி பகுதியில் வசித்து வருகிறேன். என் கணவர் கூலி வேலை செய்பவர். எங்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். என் கணவரின் வருமானம் எங்களது அன்றாட தேவைக்கு போதவில்லை. நானும் ஏதாவது வேலைக்குச் செல்லலாம் என்று நினைத்தாலும் அது நிறைவேற முடியாமல் இருந்தது. ஒரு நாள் நகராட்சி அலுவலகத்திற்கு ஒரு சான்றிதழ் பெற சென்றிருந்தேன். அங்கு பெண்கள் கூட்டமாக ஏதோ பயிற்சி நடத்தி கொண்டிருந்தனர். அப்போது அங்கிருந்த பெண் ஒருவரிடம் கேட்ட போது 'மகளிர் சுய உதவிக் குழு பயிற்சி' என்று கூறினார். அவர் என்னை அங்கு பயிற்சி அளித்து கொண்டிருந்த சமுதாய அமைப்பாளரிடம் அழைத்து சென்றார். அவர் மூலம் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் பற்றி அறிந்தேன். சுய உதவிக் குழுக்களால் கிடைக்கும் பயன்களை பற்றி அவர் மிக விளக்கமாக கூறினார். சுய உதவிக் குழுவின் பயன்களைத் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்ட என் மனதில் உடனே சுய உதவிக் குழு ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எங்கள் பகுதியில் என்னை போன்றே கஷ்டப்படும் 12 பெண்களை ஒன்று சேர்த்து அம்மன் சுய உதவிக் குழுவினை ஆரம்பித்தேன். மகளிர் சுய உதவிக் குழுவினை ஆரம்பித்ததும் எங்கள் பகுதி சமுதாய அமைப்பாளர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தைப் பற்றி மிகவும் விளக்கமாகக் கூறினார். எங்கள் குழுவிற்கு சேமிப்பிற்காக வங்கி கணக்கு துவக்கிக் கொடுத்தார்.

பின்பு நாங்கள் மாதந்தோறும் எங்கள் சேமிப்பு தொகையை வங்கியில் சேமித்து வந்தோம். ஆரம்ப காலத்தில் எங்கள் சிறு சிறு தேவைக்காக உள் கடன் எடுத்து வந்தோம். எங்களுக்கு வீட்டிலே முதன் முதலில் சிறிய அளவில் மரியாதை கிடைத்தது. பின்பு எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஏதேனும் சிறு தொழில் ஆரம்பிக்கலாம் என முடிவு செய்தோம். எங்கள் குழுவில் உள்ள 5 நபர்கள் சேர்ந்து உள் கடன் எடுத்து சிறிய அளவில் திண்பண்டங்கள் செய்து விற்க முடிவு செய்தோம். தயாரித்த பொருட்களை விற்க எங்கள் சமுதாய அமைப்பாளர் உதவியதுடன், நாங்கள் தயாரித்த பொருட்களை மற்ற குழுக்களின் உறுப்பினர்களிடம் விற்பதற்காக ஏற்பாடு செய்து கொடுத்தார். ஓரளவு இலாபம் வரவே நாங்கள் சமுதாயத்தில் பெரிய அங்கீகாரம் பெற்றது போல் உணர்ந்தோம்.

பெண்கள் வீட்டில் பாரம் என்று நினைத்த எங்கள் கணவர்களிடம் நாங்கள் சம்பாரித்த பணத்தை கொடுக்கும் போது அவர்களிடம் எங்களுக்கு கிடைத்த மரியாதையை எங்களால் சொல்ல முடியாத அளவுக்கு சந்தோஷம் கிடைத்தது. முதலில் கிடைத்த இலாபத்தை பெரிதாக செலவு செய்யாமல் சேர்த்து வைத்தோம். எங்கள் பிள்ளைகளை நன்கு படிக்க வைக்கிறோம். எங்கள் குழுவின் உறுப்பினர்கள் குழுவிலிருந்து உள்கடன் பெற்று தங்களின் குடும்பத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

பின்பு நாங்கள் அனைவரும் எங்கள் தொழிலைச் சற்று பெரிய அளவில் செய்யலாம் என முடிவு செய்து வங்கி கடன் பெற எங்கள் சமுதாய அமைப்பாளரை அணுகினோம். அவர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்களுக்கு ரூ.7,00,000/- வங்கி கடன் பெற்று கொடுத்தார். அதன் மூலம் நாங்கள் எங்கள் தொழிலுக்கு தேவையான இயந்திரங்களை வாங்கி, பெரிய அளவில் பொருட்களை உற்பத்தி செய்து, இன்று நாங்கள் 4 நபர்களுக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளோம். பொருளாதார வளர்ச்சியும் பெற்றுள்ளோம். இதற்கு காரணமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நாங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றி கடன்பட்டுள்ளோம்.

**சத்யா,**
அம்மன் சுய உதவிக் குழு,
தர்மபுரி மாவட்டம்.





# மலர்களால் மலர்ந்த வாழ்வாதாரம்

திண்டுக்கல் மாநகராட்சி, வார்டு எண் 45, மேட்டுப்பட்டியில் வசிக்கும் 12 உறுப்பினர்கள் இணைந்து, 2021ஆம் ஆண்டு "மானங்காத்தாள் மகளிர் சுய உதவிக் குழு"வினை ஆரம்பித்து, வங்கியில் சேமிப்புக் கணக்கைத் துவங்கி முறையாக சேமித்து வந்தனர்.

மானங்காத்தாள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பூ கட்டும் பணியில் மிகுந்த அனுபவம் பெற்றவர்கள் என்பதால், பொருளாதார வளர்ச்சி பெற பூ கட்டும் தொழில் மேற்கொள்ளலாம் என முடிவெடுத்தனர். ஆரம்பத்தில் வெளிநபர்களிடம் ஒப்பந்த அடிப்படையில் பூக்களை கட்டிக் கொடுத்து வருவாய் பெற்று வந்தனர். இந்தப் பணியினை குழுவின் 7 உறுப்பினர்கள் செய்து வந்தனர்.

மீதமுள்ள உறுப்பினர்கள் கோவில், பேருந்து நிறுத்தம் என மக்கள் கூடும் பகுதிகள் தற்காலிகமாக கடைகளை வைத்து பூக்களை கட்டி விற்பனை செய்து வந்தனர். இவைகளின் மூலமாக ஒவ்வொருவரும் தினம் ரூ. 150/- வருவாய் பெற்று வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கோவில்கள் மற்றும் வெளிநபர்களிடமிருந்து நேரடியாக பணி ஆணைகள் பெற்று, கோவில்கள் மற்றும் வீடுகளுக்காக நிலை மாலைகள், மலர் அலங்காரங்கள், பல்வேறு பூக்களை சேர்த்து கட்டித் தருதல் போன்ற வேலைகளை செய்து வருவாய் பெற்று வருகின்றனர்.

தாங்கள் செய்யும் பணியினை பெரிய அளவில் மேற்கொண்டிடத் தேவையான முதலீட்டிற்காக வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்தனர். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் இக்குழுவினருக்கு ரூ. 10 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டது.

இந்தக் கடன் தொகையினைக் கொண்டு, கடை ஒன்றினை வாடகைக்கு எடுத்து, பூக்களை வாங்கி மலர் மாலைகளாகக் கட்டி விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தினம் ரூ. 500/- வரை வருவாய் கிடைக்கிறது.

தங்களுக்கு ஊக்கமும், வங்கிக் கடனும் வழங்கி தங்களை சுயதொழில் முனைவோர்களாக மாற்றிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு மானங்காத்தாள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





# வணிகம் வளர்க...

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



### நெல்லிக்காய் பொடி, ஜூஸ், வத்தல், மாப்பிள்ளை சம்பா அரிசி, சிறுதானிய பொடிகள்

வெண்தாமரை மகளிர் சுய உதவிக் குழு,
புளியக்குடி, அம்மாப்பேட்டை,
தஞ்சாவூர் மாவட்டம்
கைபேசி : **94877 29134**



### செயற்கை நகைகள்

இதயம் மகளிர் சுய உதவிக் குழு
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
கைபேசி : **94861 40941**



### தரமான தேன், குல்கந்து

ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுய உதவிக் குழு
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
கைபேசி : **99409 13815**



### பனையோலையால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள்

முல்லை மகளிர் சுய உதவிக் குழு
மயிலாடுதுறை மாவட்டம்
கைபேசி : **94966 36679**



### பல்வேறு வகையான தின்பண்டங்கள்

சோழா மகளிர் சுய உதவிக் குழு
மயிலாடுதுறை மாவட்டம்
கைபேசி : **76399 13150**

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**




முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.



# ஆசிரியர் தினம்
## (செப்டம்பர் 5)

மனிதனை மனிதனாக உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர் சமுதாயத்தை சொல்வதுண்டு. ஆசிரியர்கள் என்றால் மாணவ சமுதாயத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள். ஆசிரியராக இருந்து நம் நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்த பாரத ரத்னா டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 5ஆம் தேதியே ஆசிரியர் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

பிற பணிகளில் இல்லாதது ஆசிரியர் பணியில் இருக்கிறது. மாதா, பிதா குரு தெய்வம் என்று தான் சொல்கிறோம். மாதா, பிதா, டாக்டர், இன்ஜினியர் என்று நாம் சொல்வது இல்லை. தமிழ் சிறப்பாயிரம் பாடலில் சொன்னது போல் “அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்கு தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியர் உலகத்தையே குழந்தைகளுக்குத் தருகிறார்”. இத்தகு சிறப்பு மிகுந்த ஆசிரியர் பெருமக்களைப் போற்றி புகழ்ந்திட இந்நாளில் உறுதியேற்போம்.

# சர்வதேச எழுத்தறிவு தினம்
## (செப்டம்பர் 8)

யுனெஸ்கோ என்று அழைக்கப்படும் ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் கலாச்சார நிறுவனம், எழுத்தறிவின்மையை அகற்றும் பொருட்டு 1965ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் ஈரான் நாட்டின் தலைநகர் டெக்ரானில் உலக நாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடு ஒன்றை நடத்தியது. எழுத்தறிவின்மையால் உலக நாடுகளில் ஏற்படும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கப்பட்ட இம்மாநாட்டில், எழுத்தறிவின்மையை உலகிலிருந்து அறவே நீக்குவதற்காக ஆற்ற வேண்டிய பணிகள், நடைமுறைகள் ஆகியவைகளை பட்டியலிட்டு ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

எழுத்தறிவின்மையை போக்குவதற்கான மாநாடு நடைபெற்ற செப்டம்பர் 8ம் தேதியை ‘சர்வதேச எழுத்தறிவு நாள்’ என யுனெஸ்கோவின் 14வது பொதுக்குழு பிரகடனம் செய்தது. இதன்படி 1967ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8ம் நாள் சர்வதேச எழுத்தறிவு நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எழுத்தறிவின்மையை போக்க கடைபிடிக்கப்படும் இந்நாளில் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறுகின்றன.



# உலக அமைதி தினம்
## (செப்டம்பர் 21)



ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் பிரகடனத்தின்படி ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 21ஆம் தேதியை உலக அமைதி நாளாக ஐக்கிய நாடுகளின் சபை உறுப்பு நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 1981ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதம் மூன்றாவது செவ்வாய்க்கிழமை அன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்த உலக அமைதி நாள், 2002ஆம் ஆண்டிலிருந்து செப்டம்பர் 21ஆம் தேதி அன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அமைதி என்பதற்கு பல அர்த்தங்கள் இருக்கின்றன. தற்காலத்தில் அமைதி என்பது பகை இல்லாத நிலையைக் குறிக்கிறது. சர்வதேச அளவில் போர் இல்லாத நிலையையும் குறிக்கிறது. அனைத்து பிரச்சனைகளுக்கும் அமைதியே மருந்து. மேலும் உலகின் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது சமாதானம், அனைத்து நன்மைகளுக்கும் சமாதானமே முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

உலக சமாதான முயற்சி ஒன்றின் போது ஐ.நா.வின் பொதுச்செயலாளர் ஹாமர்சீல்ட் விமான விபத்தில் உயிர் துறந்தார். இந்த துயர சம்பவம் நிகழ்ந்தது 1961ஆம் ஆண்டு செப்டம்பர் மூன்றாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமை. இந்த தினமே உலமே அமைதி தினமாக 2002ஆம் ஆண்டு வரை அனுசரிக்கப்பட்டு வந்தது. சமாதானமே சகவாழ்வு என்பதை இந்நாளில் நினைவில் நிறுத்துவோம்.

# குறிஞ்சி மணிலாவை மதிப்புக் கூட்டினோம்! குறைவான செலவில் வணிகத்தை உயர்த்தினோம்!!

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரம், கிருஷ்ணன் குப்பம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் குறிஞ்சி மணிலா உழவர் உற்பத்தியாளர் லிமிடெட் நிறுவனம் 2022 ஆம் ஆண்டு TNRTP திட்ட ஆதரவுடன் தொடங்கப்பட்டதாகும். இந்நிறுவனத்தின் பங்குதாரர்களாக 651 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 90 பேர் பெண்களாகும். இந்நிறுவனத்தின் வேளாண் விளைபொருள் உற்பத்திக்காக 4 வட்டாரங்களைச் சேர்ந்த 62 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (PGs) உள்ளன. நிறுவனத்திற்கு பங்கு மூலதன நிதியாக ரூ. 6,51,000/- திரட்டப்பட்டுள்ளது. நிர்வாகப் பொறுப்பை கவனிப்பதற்கு 10 நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் 9 பேர் பெண் நிர்வாகிகளாகும்.


இந்த கூட்டமைப்பிற்கு TNRTP திட்டத்தின் மூலம் முதல் தொழில் நிதி ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டு, நிறுவன உள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு இரண்டாவது தொழில் நிதியாக ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டு, அதில் 1 மரச்செக்கு, 1 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் செக்கு மற்றும் புண்ணாக்கு உடைக்கும் இயந்திரங்கள் ஆகியவை வாங்கப்பட்டுள்ளன. அவற்றின் வழியாக நிலக்கடலை மற்றும் உளுந்து வகைகள் திரட்டப்பட்டு மதிப்புக் கூட்டி விற்கப்படுகின்றன. மேலும் நிறுவனத்தின் வணிக வளர்ச்சிக்காக இயற்கை உரங்களும் கொள்முதல் செய்து கூட்டமைப்பின் உழவர்களுக்கும், பொது விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இதன் மூலம் நிறுவனத்தின் விற்றுமுதல் மற்றும் வருவாய் கனிசமாக உயர்ந்துள்ளது.

அதுமட்டுமின்றி நிறுவனத்தின் பசுமை தரத்திற்காக Seed உரிமம் பெறப்பட்டுள்ளது. வணிக வசதிக்கு GST சேவையும், நிறுவன தரத்திற்காக MSME மற்றும் e-NAM பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன. உணவுப் பொருள் உற்பத்தித் தரத்திற்காக அரசின் FSSAI சான்று பெறப்பட்டு, வணிக அடையாளமிட்டு பொருட்கள் விற்பனைச் செய்யப்படுகின்றன. உயர்ந்த தரத்துடன் பொருட்களை விற்பனைச் செய்து வரும் இந்த கூட்டமைப்பின் அடுத்தக்கட்ட வளர்ச்சியாக 2000 உழவர்களை நிறுவனப் பங்குதாரர்களாக உள்ளிணைக்க திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.









# லேத் பட்டறையில் பெண்ணாக சாதிக்கிறேன்! கணவருடன் தொழில் வளத்தைப் பெருக்குகிறேன்!!

என் பெயர் எஸ். யுவராணி, கோயம்புத்தூர் மாவட்டம், எஸ். எஸ். குளம் வட்டாரம், கள்ளிப்பாளையம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நானும் எங்க வீட்டுக்காரரும் 10 வருஷமா லேத் ஒர்க் ஷாப் வெச்சி நடத்திக்கிட்டு வர்றோம். எங்க வீட்டுக்காரரும் டர்னர், எனக்கும் டர்னர் வேலை தெரியும். நாங்க ரெண்டு பேரும் வேலைகளை பகுதி நேரமா பிரிச்சி செய்வோங்க. எங்ககிட்ட ஒரு லேத் மிஷின்தான் இருந்துச்சி. அதுல மாச வருமானம் ரூ. 20,000/- வந்துச்சிங்க. சில நேரத்துல அதிகமா வேலை ஆர்டர் வருமுங்க, அதை எடுத்துச் செய்ய முடியாது. ஏன்னா அதுக்கு எங்களுக்கு கூடுதலா இன்னொரு லேத் மிஷின் தேவைப்பட்டது.

லேத் மிஷினுக்கு முதலீடு செய்ய எங்ககிட்ட போதுமான பணம் இல்லைங்க, என்ன செய்யிறதுன்னு யோசிச்சிக்கிட்டிருந்தப்பதான், TNRTP திட்டம் வழியா தொழில் விரிவாக்கத்துக்கு இணை மானிய நிதிக்கடன் (MGP) கொடுக்கறதைத் நாங்க தெரிஞ்சுக்கிட்டோம். அதன்படி TNRTP திட்டத்துல MGP கடனுதவிக்கு விண்ணப்பிச்சோம், எங்களோட பங்களிப்புத் தொகை ரூ. 30,000/- கொடுத்தோம், அதனடிப்படையில் மானியக்கடன் ரூ. 2,70,000/- சேர்த்து எங்களுக்கு 3 இலட்ச ரூபாய் கொடுத்தாங்க.

அந்தக் கடனுதவியில நாங்க புதுசா ஒரு லேத் மிஷினும், ஒரு டிரில் டாப் மிஷினும் வாங்கினோம். இப்ப எங்ககிட்ட ரெண்டு லேத் மிஷின் இருக்கு, கூடுதல் வேலை ஆர்டரை எடுத்து செய்யிறோம். இதன் மூலமா இப்ப எங்களுக்கு மாச வருமானம் ரூ. 15,000/- வரைக்கும் அதிகரிச்சிருக்கு. முன்ன, ரூ. 20,000/- ஆக இருந்த வருமானம் இப்ப ரூ. 35,000/- ஆக அதிகரிச்சிருக்கு. எங்க தொழிலை மேம்படுத்த உதவிய TNRTP திட்டத்துக்கு எங்களோட மனமார்ந்த நன்றிய தெரிவிச்சிக்கிறேன்.

**எஸ். யுவராணி,**
கள்ளிப்பாளையம் ஊராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்



# மாங்கனியில் உயர்தரமும்...
# உழவுப் பொருள் உற்பத்தியும்...

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், பர்கூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் மாஞ்சோலை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், 36 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (PGs), 904 பெண் பங்குதாரர்களுடன் ரூ.9,04,000/- மூலதன நிதி திரட்டியுள்ளது. 10 நிர்வாக இயக்குநர்களைக் கொண்ட இந்நிறுவனத்தில் மாங்காய், நிலக்கடலை தேங்காய், கேழ்வரகு, கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை மதிப்புக் கூட்டி விற்பனைச் செய்யப்படுகின்றன.

TNRTP திட்டத்தின் மூலம் முதல் தொழில் நிதி ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு, அதில் நிறுவன உள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது தொழில் நிதியாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டு, அதில் பொருட்களை மதிப்புக் கூட்டவும், பாக்கெட் இடவும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு தொழிலை விரிவாக்கம் செய்து இலாபமும் இயங்கி வருகின்றது.

வணிகத்தை இலாபகரமாக நடத்தும் இந்நிறுவனம் வணிக வசதிக்காக GST சேவை, MSME பதிவு, FSSAI சான்று மற்றும் e-NAM செயலி வசதிகளையும் கொண்டுள்ளது.




# உற்பத்திகளை பெரிதாக திரட்டுகிறோம்...
# உயர்வை வணிகத்தில் எட்டுகிறோம்...

மதுரை மல்ட்டி கிராப் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், மதுரை மாவட்டம், மேலூர் வட்டாரம், கொட்டாம்பட்டி ஊராட்சியில் 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில், மேலூர், கொட்டாம்பட்டி மற்றும் திருப்பரங்குன்றத்தை சேர்ந்த 1002 உறுப்பினர்கள் பங்குதாரர்களாக உள்ளனர். 95 பேர் பெண்களாகவும், 10 பெண்கள் நிர்வாக இயக்குநர்களாகவும் உள்ள இந்நிறுவனத்தில் ரூ. 30 இலட்சம் மூலதன நிதி திரட்டப்பட்டுள்ளது.

TNRTP திட்டத்தின் மூலம் முதல் தொழில் நிதி ரூ.5 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, நிறுவன உள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது தொழில் நிதியாக ரூ. 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அதில் பால், தேங்காய், வாழை, நிலக்கடலை, காய்கறிகள், இயற்கை உள்ளீடுகள் மொத்தமாக திரட்டப்பட்டு மதிப்புக் கூட்டி விற்கப்பட்டு வருகின்றன. இத்துடன் 'சர்வோதயா பால்' மற்றும் 'MMM கால்நடை தீவனம்' ஆகியவை வணிக அடையாளம் செய்யப்பட்டு விற்பனைச் செய்யப்பட்டு வருகின்றன.

கால்நடை தீவன உற்பத்திக்காக இயந்திரம் வாங்கப்பட்டு, தீவனங்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. வெற்றிகரமாக செயல்படும் இந்நிறுவனத்திற்கு மாத வருவாய் ரூ. 30,000/- கிடைக்கிறது. நிறுவன தரத்திற்கு விதை விற்பனை உரிமம், MSME பதிவு, FSSAI சான்று ஆகியவை பெறப்பட்டுள்ளன.







# பாக்கு மட்டைத் தொழிலும்...
# வளமான வாழ்க்கையையும்...

வணக்கங்க, என் பேரு சகுந்தலா, என் வீட்டுக்காரர் பேரு ரத்னகுமாருங்க. நாங்க நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் வட்டாரம், கொக்கராயன்பேட்டை ஊராட்சியில் ஒரு ஒன்பது வருஷமா நாங்க பாக்குமட்டை தட்டு உற்பத்தி மற்றும் விற்பனைத் தொழில் பண்ணிக்கிட்டிருக்கோங்க. நாங்க கர்னாடகாவிலிருந்து பாக்கு மட்டையைக் கொண்டு வந்து தட்டுகளைத் தயாரிப்போம். எங்களோட உற்பத்தியை எங்க சுற்றுவட்டாரப் பகுதியிலயே வித்துடுவோங்க.

எங்க தொழிலைக் கொஞ்சம் விரிவாக்கம் செய்ய நினைச்சோங்க, எங்களுக்கு கொஞ்சம் கடனுதவி தேவைப்பட்டுச்சி, TNRTP திட்டம் மூலமா MGP லோன் அப்ளை பண்ணியிருந்தோம். அதன் அடிப்படையில ரூ. 4,98,000/- MGP கடனுதவி கொடுத்தாங்க.

வாங்கினலோன்ல 10 பாக்குமட்டை தயாரிக்குற மிஷின் வாங்கியிருக்கோங்க. முன்ன வந்து ஒரு 600 தட்டு ஓட்டிக்கிட்டிருந்தோங்க, இப்ப பத்து மிஷின் வரை போட்டதால 2000 தட்டு வரைக்கு ஓட்டுறோம். முன்ன சில்லறையில வியாபாரம் பண்ணிகிட்டிருந்தோங்க. இப்ப பெரிய அளவுல கடைக்கெல்லாம் வியாபாரம் பண்ணிகிட்டிருக்கோங்க. எல்லாப் பக்கமும் சப்ளை பண்ணிக்கிட்டிருக்கோங்க. இது மூலமா எங்களுக்கு மாச வருமானம் பாத்தீங்கன்னா 2,17,000/- ரூபாய் வரைக்கும் நாங்க சம்பாதிச்சிக்கிட்டிருக்கோங்க. எங்களுக்கு MGP லோன் கொடுத்த TNRTP திட்டத்துக்கு ரொம்ப நன்றிங்க.



**சகுந்தலா,**
கொக்கராயன்பேட்டை ஊராட்சி,
நாமக்கல் மாவட்டம்.








# அதிகளவில் பெண்களை தாக்கும் ஆஸ்துமா...

ஆஸ்துமாவை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியும் பட்சத்தில் நம்மால் அதன் விளைவுகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். மூச்சுத் திணறல், நெஞ்சு வலி ஆகியவை ஆஸ்துமா நோயின் ஆரம்ப கட்ட அறிகுறிகள் ஆகும். சுவாசிப்பதை கடினமாகும் இந்த நோயானது சுவாச பாதையில் ஏற்படும் அழற்சி தன்மையினால் ஏற்படுகின்றது. பல்வேறு காரணங்களினால் ஆஸ்துமா நோயானது ஏற்படலாம்.

பலருக்கும் ஆஸ்துமா நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும் பெண்களை அதிக அளவில் ஆஸ்துமா தாக்குவதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். முக்கியமாக நகரங்களில் ஏற்பட்டுள்ள காற்று மாசு காரணமாக குழந்தைகள் பெண்கள் என பலருக்கும் ஆஸ்துமா நோய்க்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

ஆஸ்துமா நோயானது ஆண்களை ஒரு விதமாகவும், பெண்களை வேறு விதமாகவும் தாக்குவதாக தெரிய வந்துள்ளது. பருவ வயதை எட்டிய பிறகு பெண்களில் பெரும்பாலானோர் ஆஸ்துமா நோய் தாக்கும் அபாயத்தில் இருக்கின்றனர்.

முக்கியமாக உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றம்தான் பெண்களை ஆஸ்துமா நோய் எளிதில் தாக்குவதற்கான காரணம். சமையல் செய்வது, வீட்டை சுத்தம் செய்வது போன்றவற்றினால் ஏற்படும் புகை, தூசி உணவு பொருட்களில் இருந்து வெளிவரும் வாசனை ஆகியவை அவர்களின் சுவாசப் பாதையில் கோளாறுகளை ஏற்படுத்துவதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இதை தவிர நீண்ட நேரத்திற்கு ஆஸ்துமாவை தூண்டக்கூடிய சூழ்நிலைகளில் இருப்பதாலும் இவை நிலைமையை மோசமாக்க கூடும். முக்கியமாக கிராமங்களில் பெரும்பாலான பெண்கள் குழந்தைகளை பார்த்துக் கொள்வதும், வீட்டை பராமரிப்பதையும் தங்களது முக்கிய வேலையாக செய்து வருகின்றனர். இது போன்ற பல்வேறு விதமான காரணிகள் பெண்கள் அதிக அளவில் ஆஸ்துமாவினால் பாதிக்கப்படுவதை ஊக்குவிக்கிறது.

ஆஸ்துமா நோய் தாக்கியதில் 20 - 25% பெண்கள் நெஞ்சில் அழுத்தம், மூச்சு திணறல் ஆகியவற்றை அனுபவித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் கர்ப்பமாக உள்ள பெண்களுக்கு ஆஸ்துமா ஏற்படும் பட்சத்தில், அவை மிகுந்த ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஆஸ்துமாக உள்ளதற்கான அறிகுறிகள்!

ஆஸ்துமாவை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியும் பட்சத்தில் நம்மால் அதன் விளைவுகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். ஒருவருக்கு ஆஸ்துமா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதும், அவருக்கு என்ன விதமான காரணிகள் ஆஸ்துமாவை ஏற்பட காரணமாக உள்ளன என்பதையும் கண்டறிவது அவசியமாகும். ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு கீழே உள்ள அறிகுறிகள் பொதுவாக ஏற்படுகின்றன

- மூக்கு ஒழுகுதல்
- தும்மல்
- தலைவலி
- மூச்சுத் திணறல்
- படிக்கட்டுகள் ஏறும் போது மூச்சுத்திணறல்
- இருமும் போது சளி வெளிவருதல்
- பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள முடியாமை

### ஆஸ்துமாவில் இருந்து தற்காத்துக் கொள்வது எப்படி ?

ஆஸ்துமா ஏற்படுவதை முழுவதுமாக நம்மால் தடுக்க முடியாவிட்டாலும் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் முடிந்த அளவு ஆஸ்துமா ஏற்படும் வாய்ப்பை நம்மால் குறைக்க முடியும். அதுக்கு நம்முடைய வாழ்க்கை முறையில் சில மாற்றங்களை செய்தாலே போதுமானது.

- ஆரோக்கியமான உணவு பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும்
- ஆஸ்துமாவை உண்டாக்கும் காரணிகளை கண்டறிந்து அவற்றில் இருந்து தள்ளி இருக்க வேண்டும்.
- தூசு புகை போன்றவற்றிலிருந்தும் ஒவ்வாமை ஏற்படுத்தும் சூழ்நிலைகளில் இருந்தும் தள்ளி இருக்க வேண்டும்
- மூச்சில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.
- சரியான சிகிச்சை முறைகளை மேற்கொள்ள வேண்டும்.



# பட்டாணி சாதம்

வீட்டில் இருக்கும் பெண்கள் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கும் சரி, வேலைக்கு செல்லும் பெரியவர்களுக்கும் சரி தினமும் என்ன சாப்பாடு செய்து கொடுப்பது என்று தெரியாமல் புலம்புவார்கள். தினமும் ஒரே மாதிரியாக லஞ்ச் செய்து கொடுத்த உங்களுக்கும் அலுத்து போயிருக்கும். சாப்பிட்ட அவர்களுக்கும் அலுத்து போயிருக்கும். அதனால் பத்தே நிமிடத்தில் தயாராகும் மிகவும் சுவையான உணவினை செய்து சாப்பிட்டு பாருங்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள். அந்த வகையில் சுவையான உணவாக பட்டாணி சாதம் எப்படி செய்வது என்று இந்த பதிவின் வாயிலாக தெரிந்து கொள்வோம்.



### தேவையான பொருட்கள்

சாதம் - 2 கப், பெரிய வெங்காயம் - 2, பச்சை பட்டாணி - 1/2 கப், மிளகு தூள் - 1 ஸ்பூன், பச்சை மிளகாய் - 3, கேரட் - 2, குடை மிளகாய் - 1, பூண்டு - 3 பற்கள், சோயா சாஸ் மற்றும் தக்காளி சாஸ் - 1 ஸ்பூன். கொத்தமல்லி - சிறிதளவு, உப்பு மற்றும் எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை

முதலில் ஒரு கடாயை எடுத்து அடுப்பில் வைத்து கொள்ளவும். பின் அதில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி கொள்ள வேண்டும். எண்ணெய் சூடானதும் அதில் பூண்டு 3 பற்கள் எடுத்து பொடிப்பொடியாக நறுக்கி அதில் போட வேண்டும். பின் அதில் நாம் நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தை போட்டு வதக்க வேண்டும். வெங்காயம் வதங்கியதும் அதில் பொடிப்பொடியாக நறுக்கிய கேரட், பச்சை மிளகாய், குடை மிளகாய் இவை அனைத்தையும் போட்டு வதக்க வேண்டும்.

இவை அனைத்தும் நன்றாக வதங்கியதும் அதில் பச்சை பட்டாணி 1/2 கப் அளவிற்கு போட்டு 5 நிமிடம் நன்றாக வதக்க வேண்டும். (பச்சை பட்டாணியை சமைப்பதற்கு முன்பு 20 நிமிடம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்). பச்சை பட்டாணி வதங்கியதும் அதில் மிளகு தூள் 1 ஸ்பூன், அதனுடன் உப்பு தேவையான அளவு மற்றும் சிறிதளவு தண்ணீர் ஊற்றி கலந்து விட வேண்டும்.

பின் நாம் வடித்து எடுத்து வைத்துள்ள வெள்ளை சாதத்தை இதில் போட்டு கலந்து விட வேண்டும். பின் இதில் 1 ஸ்பூன் சோயா சாஸ், 1 ஸ்பூன் தக்காளி சாஸ் சேர்த்து நன்றாக கலந்து விட வேண்டும். பின் கொத்தமல்லி போட்டு இரக்க வேண்டும். அவ்வளவு தான் பத்தே நிமிசத்துல மிகவும் சுவையான பட்டாணி சாதம் ரெடி..! நீங்களும் ஒரு முறை செய்து சாப்பிட்டு பாருங்க..!

## பயனுள்ள சிறு குறிப்புகள்


### சர்க்கரை நோயை கட்டுக்குள் வைக்கக் கூடிய நெல்லிச்சாறு

பெரிய நெல்லிக்காய் - 1, மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன், வெந்நீர் - 300 மிலி ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். நெல்லிக்காயை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, மிக்ஸி ஜாரில் போட்டு, 1 டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் சிறிதளவு வெதுவெதுப்பான தண்ணீர் சேர்த்து நன்கு அரைத்து எடுத்து கொள்ளுங்கள். அதனுடன் 300 மிலி அளவிற்கு சூடான தண்ணீர் சேர்த்து நன்கு கலந்து வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். தினமும் இவ்வாறு குடித்து வந்தால் சர்க்கரை நோய் கட்டுக்குள் வரும்.

இந்த நெல்லிச்சாறு சர்க்கரை நோயினால் உண்டாகும் உடல் அசதி, பலவீனம், கண் பிரச்சனைகள், சிறுநீரக பிரச்சனைகள், நரம்புகளில் உள்ள பிரச்சனைகள், மன அழுத்தத்தை போன்றவற்றை குறைப்பதுடன், புற்றுநோய் மற்றும் ஒவ்வாமைகளைத் தடுக்க உதவுகிறது. பாதங்களில் வலி, எரிச்சல் போன்றவற்றையும் குணப்படுத்துகிறது. எல்லாவற்றிக்கும் மேலாக சர்க்கரை அளவை குறைத்து கட்டுக்குள் வைக்கிறது.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,10,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

## இயற்கை வளமெடுத்தோம்,



# ஸ்ரீமதி எண்ணெய் படைத்தோம்!




| | | |
|---|---|---|
| பெயர்: **செங்கல்பட்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் லிமிட்டெட்**<br>ஊராட்சி: **சாலூர்**<br>வட்டாரம்: **திருக்கழுக்குன்றம்**<br>மாவட்டம்: **செங்கல்பட்டு** | **விற்பனைச் செய்யப்படும் பொருட்கள்:**<br>**உயர்தர மரச்செக்கு:**<br>• ஸ்ரீமதி கடலை எண்ணெய்<br>• ஸ்ரீமதி தேங்காய் எண்ணெய்<br>மற்றும்<br>• இரசாயன உரங்கள்<br>• இயற்கை உரங்கள் | எங்களின் உற்பத்திகளை மொத்தமாக வாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்:<br>**M. சித்ரா**<br>**7358189164** |

## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

### வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை– 600032, தமிழ்நாடு

(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th September 2024 Posted at Patrika Channel, Egmore.

நேரத்தை வீணாக்காதீர்கள்,

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

உங்களால் முடியும்!
சாதித்துக் கொண்டே இருங்கள்!!

**“இயற்கை உணவுப் பொருட்கள் தயாரிப்புத் தொழில் மூலம்
எங்களின் மதிப்பும், மரியாதையும் கூடியுள்ளது”**

**எதிர்கால வெற்றி தருணத்திற்காக
இன்றைய ஒவ்வொரு நொடியையும் பயன்படுத்துங்கள்**









மேலும் விவரங்களுக்கு
**வாழ்வாதார உதவி அழைப்பு எண்
155 330 ல் தொடர்பு கொள்ளவும்**